**<u>பிரிவு 1</u>**

## <u>உமாபதி சிவாச்சாரியார்.</u>

அறிவிற் சிறந்த பெரியோர்களே, நடுவர்களே, என்போன்ற சிறுவர்களே!
அனைவருக்கும் எனது பணிவன்பான வணக்கம்!

உங்கள் முன்னிலையில் இன்று நான் பேசுவதற்கு எடுத்துக் கொண்ட விடயம், உமாபதி சிவாச்சாரியார்.

உமாபதி சிவாச்சாரியார், சந்தானச்சாரியார்கள் எண்மரில் ஒருவராவார்.
இவர் கிறிஸ்துவுக்குப் பின் 14ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது, இற்றைக்கு 650 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தார். கொற்றவன் குடியில் வாழ்ந்தமையால் இவர் கொற்றவன் குடி முதலியார் என அழைக்கப்பட்டார்.

உமாபதி சிவாச்சாரியார், தமிழ் மொழியிலும் வட மொழியிலும் சிறந்த புலமை பெற்று விளங்கினார்.

பல நூல்களுக்கு பேருரை வழங்கிய இவர் பல நூல்களையும் இயற்றியுள்ளார்.

சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிரகரணம் ஆகிய எட்டு நூல்களை உமாபதி சிவாச்சாரியார் இயற்றினார்.

உமாபதி சிவாச்சாரியாரின் சிறப்பை அறிந்த சோழ மன்னன், இவருக்கு முத்துச் சிவிகை, மேளவாத்தியம், பகல் தீவெட்டி முதலிய பரிசில்களை வழங்கினார்.

உமாபதி சிவாச்சாரியார் ஒரு நாள் நண்பகல் வேளையில் முத்துச் சிவிகையில் சென்றபோது, மற்றும் ஒரு சந்தானச்சாரியாரான மறைஞான சம்பந்தர், ""பட்ட கட்டையிலே பகற்குருடு போகின்றது பாருங்கள்"" என்றார். இதனைக் கேட்டதும் உமாபதி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தரை அடைந்து ஞான உபதேசம் பெற்று அவரது சீடரானார்.

உமாபதி சிவாச்சாரியாரின் குருபூசைத் தினம் சித்திரை அத்த நட்சத்திரமாகும்,

உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருவருட்பயனை அனைவரும் கற்று இறையருளைப் பெறுவோமாக.

நன்றி

**பிரிவு 2.**

## உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருவருட்பயன்.

அறிவிற் சிறந்த பெரியோர்களே, நடுவர்களே, என்போன்ற சிறுவர்களே!
அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்!

உங்கள் முன்னிலையில் இன்று நான் பேசுவதற்கு எடுத்துக் கொண்ட விடயம், உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருவருட்பயன்.

திருவருட்பயன் மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கில் ஒன்றாகும். இந்த நூல்கள் 12 முதல் 14ம் நூற்றாண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் எழுதப்பட்டவையாகும்.

திருவருட்பயனில் இறைவனின் திருவருள் பற்றியும் திருவருளின் பயன் பற்றியும் கூறப்படுகின்றது.

திருவருட்பயன், குறள் வெண்பாக்களால் ஆனாது. 100 குறட் பாக்கள் கொண்ட திருவருட்பயனில் காப்புக் குறட்பாவும் சேர்க்கப்பட்டு 101 குறட்பாக்கள் கொண்டதாக உள்ளது.

முதலாவது அதிகாரம் பதிமுதுநிலையாகும். இறைவனின் இயல்பைக் கூறுகின்றது. இரண்டாவது அதிகாரமான உயிரவை நிலையில் உயிர்களின் நிலை பற்றிக் கூறப்பட்டுள்ளது.
மூன்றாவது அதிகாரம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களின் தன்மையைக் கூறும் இருண்மல நிலையாகும்.
நான்காவது அதிகாரம் ஞானத்தின் தன்மை கூறும் அருளது நிலையாகும்.
ஐந்தாம் அதிகாரம் அருள் உரு நிலையாகும். அதாவது அருள்உருவாகிய குருவினது தன்மையைக் கூறுகிறது.
ஆறாவது அதிகாரம் உண்மைப் பொருளை அறியும் நிலையாகும்.
ஏழாவது அதிகாரத்தில் உயிர், ஆணவ மலம் நீங்கப்பெற்று திருவருளுடன் சேர்ந்திருப்பதைக் கூறுகின்றது.
உமாபதி சிவாச்சாரியார், எட்டாவது அதிகாரத்தில் உயிர்கள் பேரின்பத்தைப் பெற்று இன்புறும் நிலை பற்றிக் குறிப்பிடுகின்றார்.
அடுத்து ஒன்பதாவது அதிகாரத்தில் ஐந்தெழுத்து அருள்நிலை பற்றியும்
பத்தாவது அதிகாரத்தில் அணைந்தோர் தன்மை, அதாவது இறைவனது திருவருளில் அழுந்தி நிற்பவர்களின் தன்மையையும் கூறுகின்றது.

இதுவரை உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருவருட்பயனின் உள்ளடக்கத்தைப் பார்த்தோம்.
தொடர்ந்து உமாபதி சிவாச்சாரியார் இவற்றை ஒவ்வொரு நிலையிலும் எவ்வாறு கூறுகின்றார் என்பதை நோக்குமிடத்து முதலில் அவர் அருளிய காப்புச் செய்யுளிலே,

> ""நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம்
> கற்குஞ்சரங்கன்று காண்""

விநாயகப் பெருமானை வணங்கினால் மெய்ப் பொருள் யாவும் இலகுவாக வந்தடையும் என்கிறார்.

மேலும் இறைவனின் இயல்புபற்றி கூறுமிடத்து,

> ""அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
> நிகரில் இறை நிற்கும் நிறைந்து""

என்கிறார்.

அகரமாகிய உயிர் எழுத்து எல்லா எழுத்துக்களோடு பொருந்தியும் தனியாகவும் நிற்பதுபோல் இறைவனும் உலக உயிர்களுடன் இணைந்தும் தனியாகவும் நிற்கின்றார்.

இவ்வாறு உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருவருட்பயனில் திருவருள் பற்றியும் அதன் பயன் பற்றியும் மிகவும் சிறப்பாகக் கூறிச் செல்வதைக் காணலாம்.

நன்றி.

**பிரிவு 3**

## திருவருட்பயனில் சிவத்தின் தன்மை

அறிவிற் சிறந்த பெரியோர்களே, நடுவர்களே, என்போன்ற சிறுவர்களே!
அனைவருக்கும் எனது பணிவன்பான வணக்கம்!
நான் இன்று உங்கள் முன்னிலையில் பேசுவதற்கு எடுத்துக் கொண்ட விடயம், உமாபதி சிவாச்சாரியாரின், திருவருட்பயன் தரும் சிவத்தின் தன்மையாகும்.
உமாபதி சிவாச்சாரியார், தனது திருவருட்பயனின் முதலாவது அதிகாரமாகிய பதிமுதுநிலையில், சிவத்தின் இயல்பு பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

""அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து""

அதாவது, "அ" என்ற உயிர் எழுத்து எல்லா எழுத்துக்களோடு சேர்ந்தும் தனித்தும் நிற்பது போல, தன்னிகரில்லா இறைவனும் தனித்தும் ஏனைய உயிர்களுடன் நிறைந்தும் நிற்கிறார் என்பதை உமாபதி சிவாச்சாரியார் இந்தக் குறளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

""தன்னிலைமை மன்னுயிர்கள்சாரத் தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்""

எமது தலைவனாகிய இறைவன் தனது ஒப்பற்ற நிலைமையை நிலைபெற்ற உயிர்கள் யாவும் அடையும்படி அருளுகின்ற சக்தியினின்றும் வேறாக இல்லாதவன் என்பதை உமாபதி சிவாச்சாரியார் தனது மற்றும் ஒரு குறளில் விளக்குகிறார்.

மற்றும் ஒரு குறளில்

""பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யான்""

எல்லாமாய் அல்லவுமாய் இருப்பதால் பெருமைக்கும் எத்தகைய நுண்ணிய பொருள்களிலும் கலந்து விளங்குவதால் நுண்மைக்கும் எல்லா உயிர்களிடத்தும் கொண்டிருக்கும் அளவிறந்த கருணையால் பேரருளுக்கும் பெறுதற்கு அருமைக்கும் இறைவன் ஒப்பில்லாதவன் என்று கூறுகிறார் உமாபதி சிவாச்சாரியார்.

தொடர்ந்து சிவத்தின் இயல்பைக் கூறுமிடத்து.

""அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்""

என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்.

அருவும் உருவும் அருவுருவும் அறிவுக்கறிவாக விளங்கும் ஞானவடிவும் உடையவனே இறைவனாகும்.

உமாபதி சிவாச்சாரியார், சிவத்தின் இயல்பைக் கூறுமிடத்து
""பல்லார் உயிருணரும் பான்மையென மேல் ஒருவன்
இல்லாதவன் எங்கள் இறை""
என்கிறார்.
பலவாக எங்கும் நிறைந்திருக்கும் உயிர்கள் தாமே உணருவனவல்ல. யாரும் உணர்த்த உணருவன. ஆனால் இறைவனோ தாமே எல்லாவற்றையும் உணரும் தனித்தன்மை உள்ளவன் – ஒப்பில்லாதவன்.
மேலும் உமாபதி சிவாச்சாரியார், இறைவனின் இயல்பை,

""நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்""
என்கிறார்,
இறைவன் தன்னை வழிபடுபவர்களுக்கு பேரின்பம் கொடுப்பான் – வழிபடாதவர்களுக்கு பேரின்பம் கொடுக்காதவன். ஆனால் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்பவன் – அவன் பெயர் சங்கரன்.

மேலும் இறைவன் பிறவிப் பிணியைத் தீர்க்கும் மருந்தாக இருப்பதால் அவரை இடைவிடாது வணங்க வேண்டும் என்றும் உமாபதி சிவாச்சாரியார் சிவத்தின் இயல்பை அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

நன்றி.

பிரிவு 4.

## திருவருட்பயனில் திருவருளின் மேன்மை

பெரியோர்களே, நடுவர்களே, என்போன்ற சிறுவர்களே!
அனைவருக்கும் எனது பணிவன்பான வணக்கம்!
உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில் கூறியுள்ள திருவருளின் மேன்மை குறித்து நான் இங்கு பேச உள்ளேன்.
உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன் உட்பட எட்டு நூல்களை இயற்றியுள்ளார். அவை சிந்தாந்த அட்டகம் எனப்படும்.

திருவருள் என்பது சிவசக்தியைக் குறிக்கின்றது.

""தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்""

எமது இறைவன் தனது ஒப்பற்ற நிலைமையை, நிலைபெற்ற ஏனைய உயிர்களும் பெறுமாறு செய்வது அவரது கருணையேயாகும் என திருவருளின் மேன்மையை வெளிப்படுத்துகின்றார் உமாபதி சிவாச்சாரியார்.
மேலும்,

""ஆக்கி எவையும் அளித்து ஆசுடன் அடங்கப்
போக்கும் அவன் போகாப் புகல்""

அதாவது, எல்லா உயிர்களையும் அவர்களின் வினைப் பயன்களுக்கு ஏற்ப உடலோடு கூட்டுவித்தும் காத்தும் அவ்வுயிர்கள் மீண்டும் பிறப்தற்கு ஏதுவான மலங்களுடன் அவற்றை ஒடுக்கும் இறைவனே உயிர்களுக்கு நீங்காத புகலிடமாகவும் இருக்கிறான். இதுவும் சிவசக்தியின் மேன்மையாகும்.
அத்துடன்
""ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்""
தேவர்களும் அறிய முடியாத இறைவன், அறிவின் கண் நீங்காத பேரறிவாய் உயிர்களை விட்டு அகலாது இருக்கின்றான். இதன் மூலமும் திருவருளின் மேன்மையைக் காண முடிகின்றது.
இன்னும் சிறப்பாக,
""அருளின் பெரியது அகிலத்து வேண்டும்
பொருளின் தலை இலது போல்""
இந்த உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு வேண்டுவது பொருட்செல்வம் தவிர வேறில்லை. இதுபோல் உயிர்கள் ஈடேறுவதற்கும் திருவருளுக்கும் மேலான செல்வம் இல்லை என்கின்றார் உமாபதி சிவாச்சாரியார். இதுவும் திருவருளின் மேன்மையை உணர்த்துகிறது.
""பெருக்கம் நுகர்வினைப் பேரொளியாய் எங்கும்
அருக்கன் என நிற்கும் அருள்""
அதாவது, உலகில் உள்ள உயிர்களுக்கு உணவும் ஒளியும் கொடுக்கும் கதிரவன் போல திருவருள் உயிர்களுக்குரிய வினைகளை நீக்கி, ஆணவ வலியைக் குறைத்து அறிவொளியை மேலாக விளங்கச் செய்கின்றது. இதுவும் திருவருளின் உயர்வாகும்.
""ஊன் அறியாது ஒன்றும் உயிர் அறியாது ஒன்றும் இவை
தான் அறியாது ஆர் அறிவார்தான்""
அதாவது, உடம்பானது அறிவற்றது, ஆதலின் ஒன்றையும் அறியாது, உயிர் உணர்த்த உணரும் தன்மை வாய்ந்தது, அன்றித் தானாக எதையும் அறியாது தன்வசம் இல்லாத உயிருக்கு உடம்மை அறியும் ஆற்றலைக் கொடுப்பதும் உயிருக்கு உணர்த்துவதும் திருவருளே ஆகும். ஆகவே திருவருள் எல்லாவற்றிலும் உயர்ந்தது.
""தரையை அறியாது தாமே திரிவார்
புரையை உணராப் புவி""
உயிர்கள் தாம் போக்குவரவுச் செய்வதற்கு நிலம் ஆதாரம் என்பதை அறியாமல் தாமே தமக்கு ஆதாரம் எனத் திரிவார் போல உலகில் உள்ளாரும் தமக்கு ஆதாரம் திருவருளே என்பதை அறியாதிருக்கின்றனர்.
""வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் (து) இறைவர் கடன்""
எவ்விடத்திலும் திருவருள் விளக்கம் இருந்தும் அதனை அறியாமல் உயிர்கள் ஐம்பொறிகள் வழியே செல்லும் நிலைமை, வெள்ளத்தில் நின்றும் நீர் பருகாது தாகத்தினால் வருந்துவதைப் போலவும் கதிரவன் உதித்து விடிந்த பின்னரும் இருள் இன்னமும் நீங்காதுள்ளது என்பதை உணர்வதையும் ஒக்கும். இதன் மூலமும் திருவருளின் மேன்மை வெளிப்படுகிறது.
""இற்றை வரை இயைந்தும் ஏதும் பழக்கமிலா
வெற்றுயிர்க்கு வீடு மிகை""

உயிரானது, அநாதி காலம் முதல் திருவருளோடு சேர்ந்திருந்தும் திருவருளை அறியாதிருப்பதனால் இவைக்கு வீட்டுலகம் வேண்டாத ஒன்றாகும்.

உமாபதி சிவாச்சாரியார், திருவருளின் உயர்வை திருவருட்பயனில் இவ்வாறு சிறப்பாக எடுத்துக் காட்டிச் செல்கிறார்.
நன்றி.

**<u>பிரிவு 5.</u>**

## <u>திருவருட்பயனில் பதி – பசு – பாசக் கோட்பாடுகள்</u>

சபையில் வீற்றிருக்கும் பெரியோர்களே, நடுவர்களே, என்போன்ற சிறுவர்களே!
அனைவருக்கும் எனது பணிவன்பான வணக்கம்!

உங்கள் முன்னிலையில் இன்று நான் பேசுவதற்கு எடுத்துக் கொண்ட விடயம் திருவருட்பயனில் பதி– பசு – பாசக் கோட்பாடுகள்.

சைவ சமயம் தொன்மையானது, சிந்து சமவெளி காலத்திலேயே சிவலிங்க வழிபாடு இருந்திருக்கின்றது, தொன்மை மிக்க சைவ சமயம் வளர்ந்து வரும் காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த களப்பிரர் மற்றும் பல்லவர் காலத்தில் பௌத்த, சமண, சமயங்கள் தோன்றி வளர்ந்தன.

சைவ சமயம் வீழ்ச்சியடைந்து சென்ற வேளையில், சமய குரவர்களும் சந்தான குரவர்களும் தோன்றி மீண்டும் சைவத்தை எழுச்சியடைய வைத்தனர். இவர்கள் சாத்திர – தோத்திர பாடல்களைப் பாடி சைவத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்.
சாத்திர நூல்களில் ஒன்றான திருவருட்பயன் சந்தானச்சாரியார்களில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியாரினால் அருளப்பட்டது.

திருவருட்பயனிலே காணப்படும் பதி – பசு – பாசக் கோட்பாடுகளை நோக்குமிடத்து, பதி என்பது இறைவனாகும். பசு என்பது உயிர். இது பாசமாகிய மும்மலங்களினால் கட்டுண்டு இருக்கும்.
முதலில் பதியைப் பார்க்குமிடத்து, இறைவன் உயர்ந்தவன் – தன்னிகரில்லாத் தலைவன் – சலமிலன். இறைவன் பசு – பாசம் போன்று அநாதியே. இதனை உமாபதி சிவாச்சாரியார்.

""ஏகன் அனேகன் இருள் கருமம் மாயை யிரண்டு
ஆக இவை ஆறு ஆதியில்""

ஒருவனாகிய இறைவனும் அளவில்லாதனவாகிய உயிர்களும் இருள் வடிவாகிய ஆணவ மலமும் கன்ம வினையும் சுத்தம், அசுத்தம் ஆகிய இரு வகை மாயையும் ஆகிய இப்பொருட்கள் ஆறும் அனாதியானவையாகும் என்கிறார்.

இறைவன் உயிர்கள் பொருட்டுக் கொள்கின்ற திருமேனிகள், அருவம் – உருவம் – அருவுருவம் என மூன்று வகைப்படும். அருவம் கண்களுக்குத் தெரிவதில்லை. உருவம் கண்களுக்குப் புலப்படக் கூடியது. அருவுருவம் ஒருகால் புலனாகியும் ஒருகால் புலனாகாமலும் இருப்பது. இதனையே உமாபதி சிவாச்சாரியார்.

""அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்"" என்கிறார்.

இறைவன், படைத்தல் – காத்தல் – அழித்தல் – மறைத்தல் – அருளல் ஆகிய ஐவகைத் தொழில்களைச் செய்கின்றார். உயிர்கள் தாம் செய்கின்ற வினைகளுக்கு ஏற்ப மண்ணில் பிறவிகளை எடுக்கின்றன.
உயிர்களின் வினைகளுக்கு ஏற்ப அந்த உயிர்களை இறைவனின் உடலோடு கூட்டுவிப்பதையே திருவருட்பயனில் உமாபதி சிவாச்சாரியார்,

""ஆக்கி எவையும் அளித்து ஆசுடன் அடங்க
போக்கும் அவன் போகாப் புகல்"" என்கின்றார்.

அடுத்து, திருவருட்பயனில் பசுவின் கோட்பாடு பற்றி நோக்குவோம்,

இங்கு பசு என்பது உயிர்களைக் குறிக்கின்றது. ஆணவம் – கன்மம் – மாயை எனும் பாசக் கட்டில் இருக்கும் உயிர் பசு எனப்படுகிறது.

பதி அறிவே வடிவானது. பாசம் அறிவில்லாதது. உயிர் பேரறிவுடையதுமல்ல – சிற்றிவுடையதும் அல்ல. அறிவித்தால் மட்டுமே அறியும்.

இறைவன் உயிர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு உள்ளான் என்பதை திருவருட்பயன்,

""பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவு என்ற பேர் நன்று அற""

என்றும்

""ஊன் அறியாது ஒன்றும் உயிர் அறியாது ஒன்றும் இவை
தான் அறியாது ஆர் அறிவார்தான்""

என்றும் விளக்குகிறது.

**<u>மறுபக்கம் பார்க்கவும்</u>**

<u>முதலாம் பக்கத்தொடர்ச்சி</u>

உயிரானது மூன்று வகைப்படும். ஆணவம் – கன்மம் – மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர்களை சகலர் என்றும் ஆணவம் – கன்மம் ஆகிய இரண்டு மலங்களை உடையவர்கள் பிரளயாகலர் என்றும் ஆணவம் எனும் ஒரு மலமுடையவர்கள் விஞ்ஞானகலர் என்றும் கூறப்படுகிறது.

""திரிமலத்தார் ஒன்று அதனிற் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தார் ஆயும் உளர்""

இந்த மூன்று மலங்களை உடையவர்களுக்கும் இறைவன் அருள்பாலிக்கும் விதத்தை,

""அகலத்தரும் அருளை ஆக்கும் வினைநீக்கும்
சகலர்க்கு வந்தருளும்தான்""
என்ற குறள்மூலம் சிவாச்சாரியார் விளக்குகிறார்.

அடுத்து நாம் திருவருட்பயனில் பாசக் கோட்பாடுகள் பற்றி நோக்குமிடத்து பதியென்பது ஒன்றாகும். பசுக்கள் பலவாகும். பாசம், ஆணவம்– கன்மம் – மாயை எனும் மூன்றாகும்.

பாசம் இருளை விடக் கொடியது, இருள் ஒரு பொருளையும் காட்டாது தன் உருவத்தைக் காட்டும். ஆனால் ஆணவ மலம் தன்னையும் காட்டாது பிறரையும் காட்டாது.
இதனையே உமாபதி சிவாச்சாரியார்,

""ஒருபொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது""
எனக் கூறுகின்றார்.

மேலும் ஆணவ மலம், எக்காலத்திலும் உயிரை விட்டு நீங்காது. இதனையே திருவருட்பயன்,

""ஆசு ஆதியேல் அணைவ காரணம் என்? முத்தி நிலை
பேசாது அகவும் பிணி""
என விளக்குகின்றது.

கன்ம வினை ஒரு பொருளைப் பற்றிநிற்குமே அன்றி தனியே நிற்காது. இதற்குப் பற்றுக்கோடு மாயை ஆகும்.
மாயை என்பது ஒரு பொருள். அதன் அசைவே கன்மம். ஆணவ மலத்தை நீக்கும் பொருட்டே கன்மம், மாயை எனும் இரு மலங்களும் இறைவனால் வழங்கப்பட்டன.

""ஏகன் அனேகன் இருள்கருமம் மாயை யிரண்டு"" என்கிறது திருவருட்பயன்.

சைவ சிந்தாந்தத்தின் உண்மைப் பொருளே பதி – பசு – பாசம் என்னும் முப்பொருளாகும். இந்த முப்பொருள்களின் உண்மையை சாத்திர தோத்திர நூல்கள் விளக்கினாலும் அவற்றுள் திருவருட்பயனே சிறப்பாக உணர்த்துகின்றது என்பதைக் கூறி உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

நன்றி.